// பதிவஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : முனைவர் பூ.ஆ.நரேஷ்

ப.மு.எண்.21717/அ4/இ3/2023, நாள். 29.05.2023.

******

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி - பள்ளிக்கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் - (Group -IIA services) (Non - Interview Post) – 2017 - 2018-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக்கல்வித் (ப.க.4(2)) துறை, நாள்.28.10.2013.
2. அரசாணை (4டி) எண்.353, பள்ளிக் கல்வித் (ப.க. 4(2)) துறை, நாள்.17.12.2013.
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 03, கடிதம் ந.க.எண்.6013/PSD–D2/2018, நாள்.02.04.2019.
5. சென்னை - 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.64542/அ4/இ3/2018, நாள்.28.05.2019.
6. இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.3463/அ1/2023, நாள்.12.05.2023.

*****

2017 - 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group - IIA Services) (Non - Interview Posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (4) இல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)இன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–இன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்யக்கோரி பார்வை (6)–இன் வாயிலாக உரிய கருத்துரு சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் பெறப்பட்டுள்ளது.

முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காண் நேரடி நியமனம் உதவியாளருக்கு அவரது பெயருக்கெதிரில் கலம் (4)–இல் குறிப்பிட்டுள்ள நாளில் உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–இன் கீழ் உட்பிரிவு 28–இன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எ ண் | பெயர்/ பதவி (திரு./திருமதி/ செல்வி) | பணிபுரியும் அலுவலகம் | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறைப் படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | ம.சரவணன், உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம். | **24.07.2019** முற்பகல் |

மேற்படி பணியாளருக்கு உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தரஎண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்மந்தப்பட்ட அலுவலர் கொண்டு வர வேண்டும்.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4) இல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்மந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு.

ஓம் /– பூ.ஆ.நரேஷ்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

/உ.ந.உ.ப.அ/

30/05/2023
நேர்முக உதவியாளர்

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக). 30/05/2023

நகல்: முதன்மைக் கல்வி அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

நகல்: வட்டாரக்கல்வி அலுவலர், திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம்.

வட்டாரக் கல்வி அலுவலர்
திருவாடானை 623 407,
இராமநாதபுரம் மாவட்டம்.